# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 106 | வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை | பங்குனி - 2017



**தேவன்** நமக்கு
அடைக்கலமும் பெலனும்
ஆபத்துக்காலத்தில்
அநுகூலமான துணையுமானவர்
**சங் - 46:01**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

## கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,

எமது ஆண்டவரும் இரட்சகரும் மீட்பருமான இயெசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வாலிபனின் 106வது இதழினூடாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தவக்காலத்தின் நடுப்பகுதியினைக் கடந்து கொண்டிருக்கிறோம்.பலரும் பல விதமாய் இவ் உபவாச நாட்களை ஆசரிப்பதை காணக்கூடியதாயுள்ளது. "நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, நீங்கள் உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்"(யோவேல்2:13) என்று கர்த்தருடைய வசனம் சொல்கிறது. இன்றே மனந்திருந்தி நற்செய்தியை நம்புங்கள் என்ற செய்தியோடு நம்மைக் கடவுளோடும், மனிதர்களோடும் ஒப்புரவாகி ஒரு பரிசுத்த வாழ்வு வாழ இத்தவக்காலம் எம்மை வழிநடத்தட்டும்.

சிறுவர்களுக்கான சித்திரப் போட்டியிலும், குறுக்கெழுத்துப் போட்டியிலும் பங்குபெற தங்கள் பிள்ளைகளை ஊக்கப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்தும் தங்களது ஆக்கங்களையும், சபையின் விஷேட நிகழ்வகளையும் எமக்கு அனுப்பிவையுங்கள்.

இவ்வூழியம் வளரவும், அநேக இதயங்களை ஆறுதல் படுத்தவும் தயவாக எம்மை உங்கள் தனிப்பட்ட, குடும்ப ஜெபங்களில் தாங்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்தும் வாலிபன் ஊழியங்களை பல்றே விதங்ளில் தாங்குகின்ற அனைவரையும் ஜெபத்துடனும், நன்றியுடனும் நினைவுகூருகின்றேன்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!
கிறிஸ்துவின் பணியில்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னித்து மகிழ்ந்திரு

நமது வாழ்விலே நாம் இன்று பல பிழையான காரியங்களை செய்து வருகின்றோம். மன்னித்து விட்டேன் என்று மேற்பூச்சாகச் சொல்லுவது இன்று மிகவும் மலிவாகிவிட்டது. மன்னிப்பு என்பது தெய்வீக குணம். மன்னிப்பின் உச்சத்தை நாம் சிலுவையில் கண்டோம். ஆனால் நமது வாழ்வில் "மன்னிப்பு" என்ற அந்த அழகிய மலர் தாக்கத்தை ஏற்படுத்தியது உண்டா? மன்னிப்பதற்கும் மறப்பதற்கும் நானென்ன இயேசுவா? என்று கேட்கும் கிறிஸ்தவர்களும் உண்டு. மன்னித்துவிட்டேன். ஆனால் எதுவித உறவும் வேண்டாம் என்கிறவர்கள் அநேகர். மன்னிப்பின் சிந்தை இல்லாததால் பல கிறிஸ்தவ குடும்பங்கள் உடைந்திருப்பது துக்கத்திற்குரிய விடயம்.

மாதிரி ஜெபத்தை கற்றுக் கொடுத்த ஆண்டவர். அதை தொடர்ந்து பிறருடைய தப்பிதங்களை மன்னிப்பதை குறித்து பேசியதிலிருந்து ஜெபத்திற்கும் மன்னிப்பிற்கும் தொடர்புண்டு என்பது புரிகின்றது. கசப்புணர்வும் கோபமும் பலவீனனை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையும் இல்லாமல் நாம் ஜெபிக்கும் ஜெபங்களில் பலனிராது. ஜெபிக்கும் போது விசுவாசம் எவ்வளவு அவசியமோ, அந்த ஜெபம் கேட்கப்படுவதற்கு அன்பும், மன்னிப்பும் அவ்வளவு அவசியம் என்பதை எடுத்துக் காட்டுகிறார் ஆண்டவர். அடுத்தவனை மன்னிக்க முடியாதவன் தம்மைச்சிலுவையில் அறைந்தவர்களையே மன்னிக்கச் சித்தம் கொண்ட இயேசுவோடு இணைந்து வாழ முடியாதவன். இயேசுவின் குணாதி சயங்களைத் தரித்துக்கொள்ள மனதில்லாதவன் அவரைப் போல மாறுவது எப்படி? அவரைச் சந்திப்பது எப்படி?

நீ தேவனிடத்தில் மன்னிப்புப் பெற்றது மெய்யானால் உன் சகோதரனை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ன் அயலவனை, எனக்கு பிழை ய்தவர்களை மன்னிப்பது கடினமாகவே ாது. மன்னிக்க முடியாதவரின் உள்ளத் ில் கசப்பும், கோபமும் எரிச்சலும் வேர் கொண்டிருக்கும். அங்கே மகிழ்ச்சியின் ஊற்றாகிய இயேசுகிறிஸ்து எப்படி வாசம் பண்ண முடியும்? அவர் துக்கமடைந்தால் நமது வாழ்வில் மகிழ்ச்சி எது?


இயேசுகிறிஸ்து எம்மை மன்னித்ததை என்றும் மறவாமல், அந்த அன்பின் குணத்தை தரிந்து கொண்டு மற்றவர்களை மன்னித்து கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ்வோம்.

"கிறிஸ்துவிற்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல் நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்".

**-Shobi**

# இவ்வுலகில் கிறிஸ்தவனாக இருத்தல்

- கிறிஸ்தவன் எப்படி வாழ வேண்டும்
  ரோமர் 12:10-21
- கிறிஸ்தவனால் ஏற்பட வேண்டிய பயன்கள்
  மத்தேயு 5:18-16
- நாம் மற்றவர்களிடம் நடந்கொள்ளும் விதத்தில் நியாந்தீர்க்கபடுவோம்
  மத்தேயு 25 :31:46
- அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கிறிஸ்தவனுக்குமுள்ள சம்பந்தம்
  ரோமர் 13:1-7
- கிறிஸ்தவன் சேவை செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்
  யோவான் 13:1-17
- கிறிஸ்தவ அன்பு
  1 கொரிந்தியர் 13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஆகையால்,
நீ புசித்துத் திர்ப்தியடைந்திருக்கையில்,
உன் தேவனாகிய கர்த்தர்
உனக்குக் கொடுத்த அந்த நல்ல
தேசத்துக்காக
அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய்.
உன் தேவனாகிய கர்த்தரை
மறவாதபடிக்கும்,
நான் இன்று உனக்கு விதிக்கிற
அவருடைய கற்பனைகளையும்
நியாயங்களையும் கட்டளைகளையும்
கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும்
எச்சரிக்கையாயிரு'.

- (உபாகமம் 8:10-11).

# எச்சரிக்கையாயிருப்போம்

நானூற்று முப்பது வருடங்களாய் எகிப்திலே அடிமைகளாயிருந்த இஸ்ரவேல் ஜனங்களை தேவன் பாலும் தேனும் ஓடுகிற ஒரு செழிப்பான தேசத்திற்கு அழைத்து கொண்டு வருகிறார். வரும் வழியிலே தேவன் செய்யும் அநேக அற்புதங்களையும் அதிசயங்களையும் காண்கிறார்கள். 'நீங்கள் வசிக்கபோகும் தேசத்திலே நீங்கள் கட்டாத வீடுகளையும், நடாத திராட்சை தோட்டங்களையும் தோப்புக்களையும் தருவேன்' என்று வாக்களிக்கிறார். அப்படி எல்லாவித ஆசீர்வாதங்களையும் மக்கள் பெற்று, அனுபவிக்கும்போது தேவனை மறந்து விட வாய்ப்பு அதிகமாயிருப்பதால் தேவன் முன்னதாகவே, ஆசீர்வாதத்தோடு அநேக எச்சரிப்புக்களையும் கொடுத்தார். ஏனென்றால் தாம் கொடுக்கும் ஆசீர்வாதம் தம்மையே மறந்து விட செய்வதாய் அமைந்து விட கூடாது என்பதற்காகவே. அவர் அநேக அதிசயங்களோடும், அற்புதங்களோடும், தாமே தேவனென்று நிரூபித்து, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கொண்டு வந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகலவித ஆசீர்வாதங்களோடும் வாழ வைத்த கிருபையை அந்த இஸரவேலர் மறந்தவர்களாய், தங்கள் இருதயம் விரும்பிய தேவர்களை பணிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். அதினால் தேவ கோபம் அவர்கள் மேல் இறங்கி, அவர்களை உலகை முழுவதும் சிதறடித்தார்.

அந்த எச்சரிக்கைகள் அனைத்தும் நமக்கும் உரியவைகளே. கசப்பான நம்முடைய பழைய வாழ்வை மதுரமாக மாற்றிய தேவனை நாம் மறந்து விடக்கூடாது. அதற்கான எச்சரிப்புக்கள் இதோ:-

- ✞ நீங்கள் நல்ல வீடுகளை கட்டி குடியிருக்கும் போதும், புசித்து திருப்தியாகும்போதும் வறுமையிலிருந்து அதிசயமாய் நடத்தி வந்த தேவனை மறவாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.
- ✞ பிரச்சனையிலிருந்து வியாதியிலிருந்து விடுதலை பெற்றவுடன் தேவனை மறந்து விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.
- ✞ பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக தேவ சமுகத்தில் விழுந்து கிடந்த நீங்கள் அது சிறப்பாய் அமைந்தவுடன் தேவனை மறந்து விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.
- ✞ உங்களுக்கு நல்ல வாழ்க்கை துணையும், பிள்ளைகளும் இருக்கும் போதும், கஷ்டங்களின்றி எல்லாம் நலமாய் இருக்கும்போதும் தேவனிடம் ஜெபிக்க ஒன்றுமில்லை என்று எண்ணி அவரை மறக்காதபடிக்கு எச்சரிக்கையிருங்கள்.
- ✞ உங்கள் கடன் பிரச்சனையில் தேவனை இறுக பற்றி கொண்ட நீங்கள் பிரச்சனை மாறியவுடன் அவரை மறந்து விடாதபடிக்கு எச்சரிக்கையிருங்கள்.
- ✞ வெளிநாட்டிற்கு செல்ல வேண்டும் என்று விருப்பத்துடன் அதற்கான முயற்சியில் ஈடுபட்டு, ஜெபித்து, விசா கிடைத்து வெளிநாடு சென்றவுடன் உங்களை அங்கு கொண்டு சென்ற தேவனை மறந்து விடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

**தொடர்ச்சி 12ம் பக்கம்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தருடைய பெரிய நாள்



**கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்து வருகிறது் கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான். - (செப்பனியா 1:14).**

சிறுபிள்ளை தகப்பன் சொல்லை கேட்கவில்லை என்றால், அவர் வரும் சமயத்தில் கதவுக்கு பினனாலோ, கட்டிலின் அடியிலோ மறைந்து கொள்வதை பார்க்கிறோம். வழியில் கடன் கொடுத்தவரை பார்க்க நேரிடும்போது கடன்பட்டவர் சந்துக்குள் மறைந்து கொள்கின்றார். அதை போலத்தான் ஆதாமும், ஏவாளும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போன போது மரத்திற்கு பின் ஒளிந்து கொண்டார்கள். அதுபோல நாமும் பாவம் செய்யும்போது மறைந்து கொள்ள இடம் தேடுகிறோம். ஆம், பாவிக்கே ஒருவரும் காண முடியாத மறைவிடம் தேவை. நீதிமானோ வெளிச்சத்தில் பயமில்லாமல் நடப்பான்.

இவ்வுலக வாழ்விலே தவறுகள் செய்து விட்டு அரசாங்கத்திடமிருந்தோ அதிகாரிகளிடமிருந்தோ தப்பித்து கொள்ள நாம் மறைந்து வாழலாம். அதன்மூலம் சில வேளை தப்பித்தும் கொள்ளலாம். ஆனால் ஒரு நாள் வரும். அன்று மரங்கள் அடர்ந்த மலைகளும், குகைகளும் நாம் ஒளிந்து கொள்ள இடம் தராது. மாறாக தன்னுள் ஒளிந்திருப்பவர்களை காட்டி கொடுக்கும். மறைந்து கொள்ள பூமியில் இடமே இருக்காது. எல்லாம் வெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சமாகவும் பட்டப்பகலாகவும் காணப்படும். அது எந்த நாள்? 'கர்த்தருடைய உக்கிரகத்தின் நாள்'. தேவன் சிங்காசனத்தில் நியாதிபதியாய் வீற்றிருந்து நியாயம் விசாரிக்கும் நாள். ஆம், அன்று நாம் சேர்த்து வைத்திருக்கும் பொன்னும், வெள்ளியும் நம்மை தப்புவிக்காது. எந்த பெரிய ஊழியரும் நமக்கு ரெக்கமண்ட் பண்ண முடியாது. இவ்வுலகத்தில் நாம் வகித்து வந்த எந்த பதவியும் நம்மை பாதுகாக்காது. எவ்வளவு பெரிய கல்வியானாலும் அதுவும் நம்மை காப்பாற்றாது. ஆனால் தேவனின் உக்கிரகத்தின் நாளிலே மூன்று காரியங்கள் நம்மை மறைத்து கொள்ளும் என்று வேதம் சொல்கிறது.

அவை 'தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள் நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள் அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்' (செப்பனியா 2:3). மேற்கண்ட வசனத்தில், நாம் கர்த்தரை தேட வேண்டும், நீதியை தேட வேண்டும், மனத்தாழ்மையை தேட வேண்டும். இவற்றை நாம் தேடினால் இவ்வுலக வாழ்விலும் சரி, தேவ கோபாக்கினை நாளிலும் சரி, நாம் ஒளிந்து கொள்ள இடம் தேடி வேண்டிய அவசியம் இல்லை.

பிரியமானவர்களே, தேவன் எத்தனை அன்புள்ளவரோ, இரக்கமுள்ளவரோ அதே அளவு அவர் எரிச்சலுள்ள தேவன். மனம் திரும்பாத பட்சத்தில், பாவியின் மேல் சினம் கொள்கிறவர். பட்சிக்கிற அக்கினி என்பதையும் மறந்து போக வேண்டாம். வேதத்தை தினமும் வாசித்தும் சத்தியத்தை வாரா வாரம் கேட்டும் இன்னும் நிர்விசாரமாய், மாய்மாலக்காரர்களாய் நாம்

வாழ்ந்தோமானால் தேவனின் கோபத்திற்கு எப்படி தப்பித்து கொள்வோம்? இன்னும் நாம் மெய்யாய் மனந்திரும்பாமல் போனால் தேவனின் நியாயத்தீர்ப்பு வரும்போது, என்ன செய்வோம்? நாம் அழிந்து போய் விடாதபடி, நித்திய நரகத்திலே தள்ளப்பட்டு போய் விடாதபடி, அந்த கொடிய நாளுக்கு முன்பாக மனம் திருந்துவோம். தேவ இரக்கத்தை பெற்று கொள்வோம். மாய்மால வாழ்க்கையை அப்புறப்படுத்தி விட்டு, தேவனையும், நீதியையும் தேடி, மனத்தாழ்மையை அணிந்து கொள்வோம். கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்துவருகிறது. ஆயத்தமாவோம். ஆமென் அல்லேலூயா!

**சகோ போல் கிறிஸ்டி, கொழும்பு**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 102ற்கான விடைகள்

### மேலிருந்து கீழ்

(1)
(2) ஒட்டகமானது
(4) ம்சவாசு (சுவாசம்)
(6) பெத்பிகே
(8) தாண்

### இடமிருந்து வலம்

(1) பெயல்செபூல்
(3) தும்பித் (புதுப்பித்து)
(5) ம்சலக (கலசம்)
(7) எம்மத்தாஷ
(9) பாது

**குறுக்கெழுத்துப் போட்டி 102 ற்கான வெற்றியாளர்**

சு. சலோமி
சந்தைத்தெரு, யாழ்ப்பாணம்

**இப் போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான இவ்இதழைத் தொடர்ந்து பெறுவார்**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஆசிரியர்,
குறுக்கெழுத்துப் போட்டி இல. 104,
"வாலிபன்"
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.**

**குறுக்கெழுத்துப் போட்டி 104 ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி**

**20.04.2017**

## சித்திரப் போட்டி இல-03

**வெற்றியாளர்**

செல்வி. மு. டெபோறா
மெதடிஸ்த தேவாலயம்,
வத்தளை.

**வெற்றியாளரினால் நிறந்திட்டி அனுப்பப்பட்ட சித்திரம் எமது சஞ்சிகையின் பின்புற அட்டையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

## சிறுவர்களின் ஞாபகத்திற்கு.....

1. காட்டில் உள்ள மிருகங்கள் ஒற்றுமை யாக வாழ்வது பிடிக்காத மிருகம் எது?
2. எந்த பாதரட்சையை நாம் அணிய வேண்டும்?
3. சத்தியம் என்னும் .......................... உங்கள் அரையில் கட்டினவர்களாயும்
4. நாம் முதலில் யாருடைய பிழையை சுட்டிக் காட்ட வேண்டும்.
5. உங்கள் சத்துருக்களை .................. ..................



**விடைகள்**
(1) குள்ளநரி
(2) ஆயத்தம்
(3) கச்சையை
(4) எனது
(5) சிநேகியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உருவாக்கம் : N.கோபிகா

## குறுக்கெழுத்துப் போட்டி இல. : 104

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | | |
| | | | | 4 | | 5 | |
| | | | | | | | |
| | | | | | | 6 | |
| 7 | | | | | | | |
| | | | | | 8 | | |
| | 9 | | | | | | |
| 10 | | | | | | | |

### இடமிருந்து வலம்

(1) என் .............. நிறுக்கப்பட்டு, என் நிர்ப்பந்தம் எல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் நலமாயிருக்கும் என யோபு கூறினான்.

(4) இயேசு 12 அப்போஸ்தலரோடும் பந்தியிருக்கும் வேளையில் நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் ..................... புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன் எனக் கூறினார்.

(6) உன் வாயை விரிவாய்த் ...................... நான் அதை நிரப்புவேன் (இடைவெளியில் வரவேண்டியது)

(7) பாதரட்சைக்கு ஒப்பிட்டுக் கூறப்படுவது திரும்பியுள்ளது.

(8) தேவதாரு விருட்சங்கள் எப்பரவையின் குடியிருப்பு?

(10) நீங்கள் இதைப் புசிக்கம் நாளிலே உங்கள் கண்கள்.......... என சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி சொன்னது. (திரும்பியுள்ளது)

### மேலிந்து கீழ்

(1) கேளுங்கள், அப்பொழுது உங்கள் ................ நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்.

(2) நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். இது நமக்குள் இராது. (இது குழம்பியுள்ளது)

(3) சண்டையின் ..................... மதகைத் திறந்துவிடுகிறது போலிருக்கும். (இடைவெளியில் வரவேண்டியது தலைகீழாயுள்ளது)

(5) ...................... உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். (இடைவெளியில் வரவேண்டியது முதல் இரு எழுத்துக்கள் மாத்திரமே உள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இயேசு சமாரியர் நாட்டின் வழியாய்ப் போக வேண்டியதாயிருந்தபடியால்..."
யோவான். 4:4

# நான் போகும் பாதை

பல நேரங்களில் பலவிதமான சிந்தனைகளினால் சிக்குண்டு எமக்கு விருப்பமான பாதையை நாமே தெரிந்தெடுக்கின்றவர்களாக இருக்கிறோம். இதனால் தேவன் நம்மீது கொண்டிருக்கும் நோக்கத்தை இழந்து போகக்கூடிய பரிதாபம் நமக்கு நேரிடலாம். அதை தவிர்த்து தேவ நோக்கத்திற்கு முதலிடம் கொடுக்க நாம் கற்றுக்கொள்வோமானால் அதுவே மிகப்பெரிய ஆசீர்வாதம்.

இயேசு சமாரியா நாட்டின் வழியாய் போக வேண்டியதாயிருந்தபடியால் என்று யோவான் எழுதியுள்ளார். இயேசு போக வேண்டிய இடம் கலிலேயா. அதற்கு இரண்டு பாதைகள் இருந்தன. ஒன்று சமாரியா தேசத்தினூடாக அடுத்தது யோர்தான் நதியை கடந்து செல்வது. சமாரியாவினூடாக வழி குறுகியது. ஆனால் சமாரியாவில் வசித்த இஸ்ரவேல் மக்களோடு கலந்தால் அவ்ரகளை தீட்டு என்று எண்ணிய யூதர், அந்த வழியை கூடப்பாவிப்பதில்லை. ஆனால் அந்த இனப்பிரச்சினை இயேசுவுக்கு இல்லை. இயேசு சமாரியப் பாதையிலேயே சென்றார். அதனால் அன்று அநேகர் தேவன் அண்டை மனந்திரும்புகிற தேவ நோக்கம் நிறைவேறிற்று. யூதருக்கு பயந்து இயேசு அந்த பாதையை தவிர்த்து இருந்தால் என்னவாயிருக்கும் இயேசுவோ தாம் வந்த நோக்கத்தை, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார்.

இன்று நமது காரியம் என்ன? நாம் பலவித விருப்பங்களையும், திறமைகளையும் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் தேவ வழிநடத்தலுக்கு நாம் இடமளிக்காவிட்டால் எமது திறமைகளால் என்ன பயன்? அநேக சந்தர்ப்பங்களில் தேவன் வித்தியாசமான முறைகளிலே நம்மைச் சாட்சிகளாக

**தொடர்ச்சி 12ம் பக்கம்...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்த சித்தங்கொண்டு வழிநடக்கக்கூடும். அந்த சமயத்தில் தைரியமாக நாம் கீழ்ப்படிவோமாக அல்லது அதை தவிர்த்து நம் இஸ்டப்படி நடப்போமா? நமக்கு மாதிரிக்கு இயேசு ஒருவரே போதும். அவர் தமது சிறுவயதில் யோசேப்பையும் மரியாளையும் நோக்கி 'என் பிதாவுக்கு அடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று நீங்கள் அறிவீர்களா" என்றார். இப்படியாக, தாம் உலக பெற்றோருக்கு கீழ்ப்படியும் பிள்ளை என்பதை காட்ட அவர்களுடன் சென்றாலும், தாம் முதலாவது பிதாவுக்கே கீழ்ப்படிய வேண்டியதன் அவசியத்தை ஆண்டவர் அவர்களுக்கு உணர்த்தினார். இன்னொரு சமயத்தில் 'என்னை அனுப்பிய பிதாவினுடைய சித்தத்தை செய்வதே என்னுடைய கடமையாய் இருக்கிறது" என்றார். நாமும் அவ்வாறே எமது பிதாவினுடைய சித்தத்தை செய்ய எம்மைத் தாழ்த்தி அவர் பாதையில் கீழ்ப்படி வோடு நடக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

நான் போகும் பாதையை அவர் அறிந்த அவருக்கு சித்தமான பாதையில் செல்ல நாங்கள் எங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு அவருக்கான சரியான பாதையை தெரிந்து நடக்க வேண்டிக் கொள்வோம்.

-K. **ஜான்சி**

## 6ம் பக்க தொடர்ச்சி

அநேகர் தங்கள் பிரச்சனைகளை தங்கள் சபை போதகரிடம் சொல்லி, அவர் விடாமல் அதற்காக ஜெபித்து, தேவனிடம் மன்றாடி, அவர்களுடைய தேவைகளை பெற்று தந்தவுடன், சபைக்கு செல்வதை மறந்து, சுய இஷ்டத்திற்கு வாழ்ந்து, தேவனை மறந்து விடாதபடிக்கு எச்சரிக் கையிருங்கள்.

பிரியமானவர்களே, தேவன் நமக்குத்தரும் ஆசீர்வாதங்களும் அவரையே மறக்க செய்யும் ஆபத்தில் கொணடு வந்து விட்டுவிடக்கூடும். ஆகவே நம் வீடு சகல வஸ்துக்களினாலும் நிறைந்திருக்கும் போதும், மனதிற்கு எல்லாம் ரம்மியமாயி ருக்கும்போதும், இவையெல்லாவற்றையும் நாம் அனுபவிக்கும்படி அனுக்கிரகம் செய்த தேவனை மறந்து விடாதபடி கவன மாயிருப் போமானால், ஆசீர்வாதமான சூழ்நிலையானாலும் ஆசீர்வாத குறைச்சல் போல தோன்றும் சூழ்நிலையானாலும் தேவனுடைய அன்பை விட்டு எவரும் நம்மை பிரித்து விட முடியாது. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத் தவரை நாம் நம் உயர்வில் மறந்து விடவே கூடாது. நம்முடைய பழைய நிலையை நாம் மறந்து, தற்போது இருக்கும் உயர் நிலையை பெருமையாய் நினைத்து கொண்டு தேவனுக்கு நன்றி செலுத்தாமற் போவோமானால், நம்மை விட மோச மானவர்கள் யாரும் இருக்க முடியாது. தேவன் கொடுத்த ஆசீர்வாதங் களுக்காக அவரை எப்போதும் துதிப்போம். ஐசுவரியங்களின் மேல் நம் எண்ணத் தையும், கவனத்தையும் செலுத்தாமல், தேவனை துதிப்பதில் நம் கவனத்தையும், எண்ணத்தையும் செலவிடுவோம். அப்போது கர்த்தர் இன்னும் நம்மை அதிகமாய் உயர்த்துவார். ஆமென்.

**- அன்பின் சகோதரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்மையான ஆராதனை

கிறிஸ்தவர்களாகிய எமக்கு துதி, நன்றி என்பன பெறுமதிமிக்க இறை அனுபவங்கள். இவை உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும் விசுவாச வெளிப்பாடு.நம் மத்தியில் வாழ்ந்த ஆச்சிரம அடியான் அருள்திரு சேவக் I.T யேசுசகாயம் போன்றோர் தம் இறை அனுபவத்தின் வெளிப்பாடான துதி,நன்றி என்பவற்றைக் கருத்தாழம் மிக்க பாடல்கள் மூலம் வெளிப்படுத்தினர். காலத்தின் மாற்றம் காணும் காலத்தின் தேவைக்கேற்ப இவை குறும் பாடல்களாக மாற்றம் பெற்றன.எது எப்படி இருப்பினும் தனிப்பட்ட வகையில் ஆண்டவரோடு சரியான உறவைப் பேணி அதன் வெளிப்பாடாக உலகிற்கு உப்பாக, ஒளியாக வாழ்பவர்கள் வெளிப்படுத்தும் ஓஉ விசுவாச அனுபவமும் இது எனலாம். அப்போஸ்தலர் 16:25 இல் பவுலும், சீலாவும் ஏறெடுத்த ஜெபத்தோடு கூடிய துதி அவர்களை விடுவித்தது. எனவே நாமும் துதித்தால் விடுதலை கிடைக்கும் என பலர் கூறுவதை இந் நாட்களில் கேட்கிறோம். யார் இந்த பவுலும் சீலாவும்.? இவர்கள் இறை வார்த்தையில் நிரம்பப் பெற்றவர்கள், பிற மனிதரோடு சரியான உறவைப் பேணியதன் மூலம் திருச்சபைகளை உருவாக்கியும் கட்டியும் எழுப்பியவர்கள். இந் நாட்களில் பரவசத்தோடு கூடிய துதி வேளையை நடத்தும் நாம் நம்மையே கேட்க வேண்டிய கேள்விகள் எனது அன்றாட வாழ்வில் இறை வார்த்தைக்கும், ஜெபத்திற்கும் நான் கொடுக்கும் முக்கியத்துவம் என்ன.? எனது குடும்ப அங்கத்தவரோடும், திருச்சபை மக்களோடும் எனது உறவு எப்படிப்பட்டது? பிற மதத்தவரையும் இறை படைப்புகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்கிறேனா, அல்லது அவர்களுக்குப் பிசாசின் பிள்ளைகள என்ற பெயர் சூட்டி ஆன்மீகப் பெருமை கொள்கிறேனா.? ஆராதனைகளில் இசை மீட்பவர்களும் இதற்கு விதி விலக்கல்ல. இவற்றின் அடிப்படையில் நாம் வாழாவிடின் ஆராதனை வேளை நம் திறமையைப் பிறர் கேட்கச் செய்யும் வேளையாக மட்டுமே அமையும். இதனால்தான் ஆமோஸ் தீர்க்கன் மூலம் கடவுள் விடுக்கும் எச்சரிக்கை இப்படி அமைகிறது.(உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று: உன் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன் ஆமோஸ் 5:23) இதனால்தான் ஆண்டவரும் ஓர் ஆழம் மிக்க ஒரு சத்தியத்தை மிகவும் எளிதான முறையில் விளக்குகிறார்.மத்தேயு 5ம் அதிகாரத்தில் உப்பாக, ஒளியாக வாழும்படி கூறுகிறார். இவை இரண்டுமே சத்தமி டாதவைகள். உறவைப் பேணி இறை யரசைக் கட்டியெழுப்புவதற்கு இதை விட எடுத்துக்காட்டு வேறு எதுவும் இல்லை. 16ம் வசனத்தில் இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற் கிரியைகளைக் (செயல் களைக்) கண்டு உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்கிறார். நற் செயல்களின் சத்தத்தைக் கேட்டு என்று அவர் கூறவில்லை.

ஆசிரம ஊழியத்தில் ஈடுபட்ட பெரியண்ணன் அவர்கள் அனுதினமும் தவறுகள் செய்யும் ஒரு வாலிபனை தண்டித்து திருத்த வேண்டி இருந்தது. அவர் குறிப்பிட்ட வாலிபனை ஓர் அறையில் பூட்டி ஒரு பிரம்மை எடுத்து அவனிடம் நீட்டி நீ செய்யும் தவறுக்காக என்னை அடி என்று கூறினார் .அவனோ தயங்கினான். நீ என்னை அடிக்காமல் விட்டால் நீயும் நானும் இந்த அறையை விட்டு செல்ல முடியாது. நீ என்னை தண்டித்தால் மட்டுமே செல்லாம் என்றார். அவனோ கடமைக்கு ஒரு அடி அடித்தான். அவரோ இது போதாது பல அடிகள் உரக்க அடி என்றார். அவனோ ஓங்கி சில அடிகள் அடித்து தனது பிழையான வாழ்வை உணர்ந்து அவரின் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டு தான் இனிமேல் இப்படி தவறுகள் செய்ய மாட்டேன் என்று கூறி மனம் மாறினான். பின்னாளில் அவன் ஓர் ஊழியனாக மாறினான். என்று நாம் எப்படி ஒளி வீசுகிறோம்?

**அருட்திரு. S.D தயாசீலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுப்புதல் 2017

கோட்டமுனை மெதடிஸ்த திருச்சபையில் கடந்த மாசி மாதம் 24ம், 25ம் திகதிகளில் வடக்கு, கிழக்கு சபா சங்க தலைவர் அருட்திரு.S.Sரெரன்ஸ் தலைமையில் வாலிபர்களுக்கான எழுப்புதல் ஒன்று நடைபெற்றது. இந்த எழுப்புதல் தீ க்கு கோட்டமுனை, புளியந்தீவு, செங்கலடி மற்றும் வாழைச்சேனை வாலிபர்கள் சுமார் 150 பேர் அளவில் கலந்து கொண்டனர்.

விஷேட செய்தியாளராக இந்தியாவிலிருந்து போதகர் ஐசக் லிவிங்ஸ்டன் அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர் வாலிபர்களை துதி வேளையிலும், செய்தியிலும் வழிநடத்தினார். தேவன் அநேக வாலிபர்களை தொட்டதுடன் பல வாலிபர்கள் அந்நிய பாஷை பேசும் வரத்தினையும் பெற்றனர் வந்திருந்த வாலிபர்கள் ஆசீர்வாதம் பெற்றனர். தேவனுக்கே துதி உண்டாவதாக ஆமென்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரப் போட்டி இல - 05

இந்த சித்திரத்தை நன்றாகக் கவனித்து, பொருத்தமான வர்ணம் தீட்டி, இதனுடன் தொடர்புடைய ஏதாவது ஒரு வேத வசனத்தை சரியான வேதாகமப்பகுதியுடன் குறிப்பிட்டு எமக்கு அனுப்பி அழகிய பரிசு ஒன்றை வெல்லுங்கள்!



## போட்டி பற்றிய நிபந்தனைகள்

நீங்கள் 12 வயதிற்குட்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்.
உங்களது ஞாயிறு பாடசாலை அதிபர்/ ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாக எழுதபபட்டிருத்தல் வேண்டும்.

**அனுப்பவேண்டிய கடைசித்திகதி :**

**20.04.2017**

## அனுப்பவேண்டிய முகவரி

ஆசியர்
"வாலிபன் ஊழியங்கள்"
இல: 92, கோட்டைமுனை
மெதடிஸ்த ஆலயம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




– ஜீவந்தி அக்கா –

# சிறுவர் பகுதி

## யாருடைய பிழை?

ஒரு காட்டில் சகல மிருகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. சிங்கம் இந்தக் காட்டின் அரசனாக அந்தக் காட்டை ஆண்டுவந்தது. மிருகங்கள் எல்லாம் ஒற்றுமையாக வாழ்வது அந்தக் காட்டில் உள்ள ஒரு நரிக்குப் பிடிக்கவில்லை.

இந்தக் குள்ள நரி ஒருவர் செய்யும் பிழையை சுட்டிக் காட்டுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தது. ஒரு நாள் சிங்க ராஜாவிடம் இந்தக்குள்ள நரி "மகாராஜா. இந்தப் புலியார், இறைச்சியை புலி சிறுத்தையுடன் சண்டையிட்டு சிறுத்தை வேட்டையாடிய இறைச்சியைப் பறித்து தின்றுவிட்டது" என்றது. " சிங்கம் நரியைப் பார்த்துச் சொன்னது "நான் புலியிடம் பேசுகின்றேன். நீ போய் வா" என்றது. இதே போல் தினமும் குள்ள நரி சிங்க ராஜாவிடம் ஏதாவது ஒரு மிருகத்தின் தவறை சுட்டிக் காட்டுவதே வழக்கமாக இருந்தது.



ஒரு நாள் குள்ள நரி முயலின் தவறை சிங்க ராஜாவுக்குக் கூறும்போது, "நரியாரே! உன் கதையை நிறுத்து. நானும் உன்னை ஒரு வாரமாக கவனித்துக் கொண்டிருக்கின்றேன் நீ, மற்றவர்களின் பிழையை சுட்டிக் காட்டுகின்றாய் ஆனால் நீ தினமும் மற்ற விலங்குகளின் உணவைத் திருடி தின்கின்றாய் இது எனக்குத் தெரிந்துவிட்டது. முதலில் நீ உன்னுடைய பிழையைத் திருத்திக் கொள் பின் மற்றவர்களது பிழையைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக் காட்டு" என்று சிங்கம் கடுமை யாக கூறியது. இதைக் கேட்ட குள்ள நரி வெட்கித் தலை குனிந்தது.

என் அன்புத் தம்பி, தங்கைகளே! மத்தேயு 7:4 இல் "இதோ உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி : நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?" என்று எழுதியுள்ளது. இன்று நாம் அனைவரும் இதே தவறை செய்து கொண்டிருக்கிறோம். நமது பிழையை திருத்திக் கொள்ளாமல் மற்றவர்களுடைய பிழையை சுட்டிக் காட்டுகின்றோம். இன்றிலிருந்து தீர்மானம் எடுப்போமா? யாருடைய பிழையை முதன்மைப்படுத்தப் போகின்றோம் என்று...

ஜெபம் : அன்புள்ள இயேசப்பா, நான் என்னுடைய தவறை உணர்ந்து திருந்தி வாழ உதவி செய்யுங்கள். ஆமென்.

# எம் மனதில் எப்போதும்



- ✝ 10 கற்பனைகள்
  யாத்திராகமம் 20:1-17
- ✝ ஆவியின் கனிகள்
  கலாத்தியர் 6:22-23
- ✝ தேவனுடைய சர்வாயுத வர்க்கம்
  எபேசியர் 6:14-17
- ✝ மலைப்பிரசங்கம்
  மத்தேயு 5,6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு....

## நம் வாழ்க்கை எப்படியானது?



இலேசானதா வாழ்க்கை இலேசானதா?
இந்த உலகில் வாழும் வாழ்க்கை இலேசானதா?
அன்பாய் இருப்பது இலேசானதா?
அனைவரும் சேர்ந்து ஜெபிப்பது இலேசானதா?
சந்தோஷமாய் இருப்பது இலேசானதா?
சமாதானம் பண்ணுவது இலேசானதா?
கத்தருக்கு காத்திருப்பது இலேசானதா?
கருணையாய் நடப்பது இலேசானதா?
நல் மனிதனாய் வாழ்வது இலேசானதா?
நறுமணம் வீதுவது இலேசானதா?
பொறாமையைத் தவிர்ப்பது இலேசானதா?
பொறுமையாய் இருப்பது இலேசானதா?
ஆனால்
அகந்தை அகன்றால் இலேசானது
அமைதியாய் இருந்தால் இலேசானது
பெருமை ஒழிந்தால் இலேசானது
பெரும் தன்மையாய் நடந்தால் இலேசானது
தாழ்ந்த சிந்தை இருந்தால் இலேசானது
தாழ்தவனை சினேகித்தால் இலேசானது
இயேசுவின் வார்த்தையைக் கைக்கொண்டால் இலேசானது
இயேசுவின் சித்தப்படி நடந்தால் இலேசானது
நீ என்னிலும் என் வார்த்தை உன்னிலும் நிலைத்திருந்தால் இலேசானது
நீ ஆண்டவரின் கட்டளைகளைக் கைக் கொண்டால் இலேசானது
இலேசானது வாழ்க்கை இலேசானது
கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கை இலேசானது

**Mrs.V.A. Thiyagarajah**
(V.A.I கோட்டைமுனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்



கொடுப்பதற்கு கற்றுத் தாரும் - ஆனால்
எவ்வளவு கொடுக்கிறோம் என்று
எண்ணிடாமல் கொடுப்பதற்கு

- இக்னேஷியஸ்

1491-1556



தொடர்புகளுக்கும், ஜெபத் தேவைகளுக்கும் : ஆசிரியர், "வாலிபன்" சஞ்சிகை, மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை. 077 233 5106, 077 958 4930, 077 771 8847 E-mail : vaalipankyf@gmail.com | Web. : www.vaalipan.com | Facebook : vaalipan | Twitter : vaalipan_kyf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org